# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

TOR TIMES OF REPUBLIC
VOICE OF TAMILNADU

| ஜனவரி 2025 | மலர் -03 | இதழ் - 10 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/- |
|---|---|---|---|---|
| January 2025 | Volume - 03 | Issue - 10 | Tamil Monthly | Price Rs. 30/- |



## தங்கத்தின் பயணம் பழைய விலை VS புதிய விலை!

## தமிழக அரசியலில் வெடித்த மோதல்

சட்டபேரவையில் ஆளுநர் உரையை வாசிக்காமல் வெளியேறிய விவகாரம் பல அரசியல் கட்சியினர் கடும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

## தங்கத்தின் பயணம் பழைய VS புதிய நிலை!

தங்கத்தின் விலை தொடர்ந்து உச்சத்தில் செலகின்றன. ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வந்தால் தங்கம் விலை குறையுமா? இந்த வருடதிற்குள் 1லட்சம் கடந்துவிடுமா?




**SRI MEENAKSHI TEXTILES**

No. 2/3, Singara Garden 3rd Lane, Old Washermenpet , Chennai - 600021.

S . SHANMUGAVEL - Mob : 95004 66660, 91156 66777 : 044 - 2596 9679.



# தமிழக அரசியலில் வெடித்த மோதல் - முதல்வர் Vs ஆளுநர்!

## சட்டப்பேரவை சர்ச்சை - அரசியல் பரபரப்பு உருவான தருணம்!



தமிழக அரசியலில் ஆளுநர் மற்றும் மாநில அரசுக்கு இடையேயான மோதல் புதியது அல்ல. ஆனால், இந்த முறை நிலைமை மிகவும் தீவிரமாகி, அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. வழக்கமாக, சட்டப்பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது, ஆளுநர் அரசின் சாதனைகளை பட்டியலிட்டு உரை வாசிக்க வேண்டும். ஆனால், எதிர்பாராத விதமாக, ஆளுநர் ஆர்.என். ரவி, உரையை முழுமையாக வாசிக்காமல், சட்டமன்றத்திலிருந்து வெளியேறினார். இந்த செயல் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளுநரின் நடவடிக்கையை கண்டித்தனர். அரசியல் வட்டாரங்களில், இது குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்தன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஆளுநரின் இந்த செயலை கடுமையாக விமர்சித்தார். அவர் கூறியதாவது, "அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் சாதனைகளை மாநில ஆளுநர் வாசிப்பது சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு! ஆனால், கடந்த ஆண்டுகளில் இருந்ததை வெட்டியும், இல்லாததை ஒட்டியும் வாசித்த ஆளுநர், இம்முறை முழுவதுமாக உரையை வாசிக்காமலேயே வெளியேறியிருப்பது சிறுபிள்ளைத்தனமானது." முதலமைச்சரின் இந்தக் கருத்து அரசியல் வட்டாரங்களில் பெரும் விவாதமாக மாறியது. திமுக ஆதரவாளர்கள், "மாநில அரசின் அதிகாரத்தை ஆளுநர் மீறிக்கொள்ள முடியாது. தமிழக மக்களாலும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாலும் ஆளுநர் இந்த நிலைப்பாடு ஏற்கப்பட முடியாது," எனக் கண்டனம் தெரிவித்தனர்.

### ஆளுநர் மாளிகையின் விளக்கம் - உண்மை நிலைமை என்ன?

இந்த சர்ச்சைக்கு பதிலளிக்க, ஆளுநர் மாளிகை விரைவாக விளக்கம் அளித்தது. அரசியல் சாசனம் மற்றும் தேசிய அடையாளத்திற்கு மரியாதை வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்ததாகவும், தேசிய கீதம் பாடப்படவில்லை என்பதால் தான் ஆளுநர் வேதனையுடன் வெளியேறினார் எனவும் விளக்கப்பட்டது. ஆளுநரின் விளக்கம், தமிழக அரசியலில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அரசியல் ஆய்வாளர்கள், "இது மாநில அரசின் அதிகார வரம்பை மீறிய செயல். ஆளுநரின் நடவடிக்கை அரசியல் நோக்கத்துடன் உள்ளது," என்று விமர்சனை செய்தனர். அதே சமயம், பாஜக தரப்பு, "ஆளுநர் தனது சட்ட வரம்பிற்குள் இருந்துதான் செயல்பட்டுள்ளார்" என்று கூறினர். ஆனால், தமிழக மக்கள் மத்தியில் பெரும்பாலோர், "மாநில உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்" என்ற கருத்தை முன்வைத்தனர். சமூக வலைதளங்களில் இந்த விவாதம் வேகமெடுத்தது. "மாநில உரிமை முக்கியமா? மத்திய அரசின் அதிகார வரம்பு மேலோங்குகிறதா?" என்ற கேள்விகள் எழுந்தன.

### இந்த மோதல் தமிழக அரசியலில் எந்த மாற்றங்களை ஏற்படுத்தும்?

இந்த அரசியல் மோதல் தமிழக அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வருங்கால தேர்தல்களிலும் பிரதிபலிக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, தனது அதிகாரங்களை மீட்க போராட வேண்டிய நிலை தமிழ்நாட்டில் உருவாகிறதா?


முதலமைச்சரின் இந்த நிலைப்பாட்டுக்கு மாநில அரசியலில் பெரும் ஆதரவு கிடைத்தது. ஆனால், இது மத்திய அரசுக்கு எதிரான ஒரு பெரிய அரசியல் போராட்டமாக மாறி விடுமா என்பதும் விவாதிக்கப்படும் கேள்வியாக உள்ளது. மாநில உரிமை குறித்து தமிழகம் எப்போதும் உறுதியான அரசியல் போக்குடன் இருக்கிறது. இதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதற்கான பதிலை வரவிருக்கும் நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

### இந்த மோதல் முடிவுக்கு வருமா?

### அல்லது தமிழக அரசியலில் புதிய திருப்புமுனையாக மாறுமா?

அதற்கான பதிலை காலமே சொல்லும்!

# நிறுவன தலைவர் கூறிய 90 மணி நேரம் வேலை சர்ச்சை!




2025 ஜனவரி மாதம், இந்திய தொழில்துறையில் பெரும் சர்ச்சையை உருவாக்கிய ஒரு விவகாரம் வெளிப்பட்டது. **Larsen & Toubro (L&T)** நிறுவனத்தின் தலைவர் எஸ். என். சுப்பிரமணியன் ஒரு விவாதத்திற்குரிய கருத்தை வெளியிட்டார். "இந்தியா உலக பொருளாதாரத்திற்குத் தேவை. நாம் வளர விரும்பினால், இளைஞர்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டும். வாரத்திற்கு *40-45 மணி நேரம் வேலை மட்டும் போதாது என்றும் நாம் வாரத்திற்கு 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டும்!" என்று அவர் வலியுறுத்தினார். இந்தக் கருத்து வெளியானதும், தொழிலாளர் உரிமைகள், உடல்நலம், வேலை நேர சட்டங்கள் மற்றும் வாழ்க்கை தரம் குறித்து பெரும் விவாதங்கள் எழுந்தன.
இந்திய தொழிலாளர் சட்டத்தின்படி, ஒரு வாரத்திற்கு அதிகபட்சம் 48 மணி நேரம் வேலை செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 90 மணி நேர வேலை முறை, தொழிலாளர்களின் உரிமைகளை மீறுகிறதா? என்று பலரும் கேள்விகளை எழுப்பினர்.

அரசியல் மற்றும் தொழிலாளர் சங்கங்களின் கடும் எதிர்ப்பு!

இந்த கருத்து வெளிவந்தவுடன், நாடாளுமன்றத்திலும், தொழிலாளர்களின் போராட்டங்களிலும் பெரும் எதிர்ப்பை சந்தித்தது."ஒரு சிணிளி மாதத்திற்கு 51 கோடி சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவரே வாரத்திற்கு 90 மணி நேரம் வேலை செய்கிறாரா?" என்று நேரடியாக கேள்வி எழுப்பினார்கள்.







பல்வேறு தொழிலாளர் சங்கங்களும், இது நவீன கால அடிமைத்தனம் என கண்டனம் தெரிவித்தன. "இந்தியாவில் ஏற்கனவே அதிக வேலை நேரம், குறைந்த ஊதியம், வேலைவாய்ப்பு பாதுகாப்பு இல்லாத சூழல் இருக்கிறது. இதை மேலும் மோசமாக்கும் திட்டம் இது!" என்று அவர்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

தொழிலாளர்கள் & சமூக ஊடக எதிர்ப்புகள் !


இந்த விவகாரம் நிறுவனங்களின் அதிகாரத்தை, தொழிலாளர் உரிமைகளை சுயநலமாக பயன்படுத்தும் முயற்சியாக பார்க்கப்பட்டது. **#Stop90HoursWork** என்ற ஹாஸ்டேக் வைரலாகி, மக்கள் தங்கள் குரலை உரத்தகொண்டு பேசத் தொடங்கினர். ஒரு தொழிலாளி தனது சமூக ஊடக பதிவில், "நாங்கள் வேலை செய்ய வர்றோமா, இல்லையா என்று கேள்வி எழுப்பினார். மிஜி துறையிலிருந்தும், "இந்திய தொழிலாளர்கள் மனிதர்கள்தான், ரோபோ அல்ல!" என்ற கருத்து அதிக ஆதரவைப் பெற்றது.

### L&T விளக்கம் – ஆனால் சந்தேகங்கள் நீங்கினவா?

இந்த சர்ச்சை பெரிதாக வளர்ந்த பிறகு, **L&T** நிறுவனம் அதிகாரப்பூர்வ விளக்கத்துடன் வெளியே வந்தது. "நாங்கள் 90 மணி நேர வேலையை கட்டாயம் செய்யவில்லை. வேலையை விருப்பத்திற்கேற்ப செய்யலாம்," என்று நிறுவனம் கூறியது. ஆனால், தொழிலாளர் சங்கங்கள் இதை ஏற்கவில்லை. அவர்கள், "நீண்ட வேலை நேரம் ஒரு தேர்வாக இருந்தாலும், மனஅழுத்தம், தொழிலாளர் பாதுகாப்பு குறைபாடு போன்றவை நீங்காது!" என்று கண்டனம் தெரிவித்தனர்.

### இந்த விவகாரம் இந்திய தொழிலாளர்களின் எதிர்காலத்தைக் மாற்றுமா?

இந்தியாவில் பல தொழிலாளர்கள் ஏற்கனவே நீண்ட நேரம் வேலை செய்கிறார்கள். ஆனால், 90 மணி நேர வேலை என்ற ஆலோசனை, தொழிலாளர் உரிமைகளுக்கு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்று பலர் கருதுகிறார்கள். இது சட்ட ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்துமா? அல்லது இப்போது பரபரப்பாகி, மறு சில மாதங்களில் மறந்து விடுமா?

# தங்கத்தின் பயணம்
# பழைய விலை VS புதிய விலை!






தொடர்ந்து உச்சத்தை தொட்டுவரும் "தங்கம்" மக்கள் மத்தியில் 2025ல் அதிகமாக கேட்கப்படும் கேள்விகளாக மாறியுள்ளது. கடந்த ஒரு தசாப்தத்தில், தங்கத்தின் விலை தொடர் ஏற்றத்துடன் வளர்ந்து கொண்டே வந்துள்ளது. ஒருகாலத்தில் மதிப்புக் குறையாத முதலீடாக இருந்த தங்கம், இப்போது ஒரு லக்சுரி ஆக மாறியுள்ளதா? கடந்த 10 ஆண்டுகளில் ஒரு கிராம் தங்கம் ரூ.2,500 இருந்தது, இன்று ரூ.6,500 கடந்துள்ளது. மக்கள் “இன்னும் விலை உயருமா? இல்லை, இப்போதே வாங்கிவிடலாமா?” எனக் குழம்பியிருக்கிறார்கள். 2025ல் தங்கத்தின் விலை மேலும் உயர காரணங்கள் என்ன? மக்கள் எப்படி இதை அணுகலாம்? உண்மையில் இது ஒரு பாதுகாப்பான முதலீட்டா? என்பதை புரிந்துகொள்ள, கடந்த கால வளர்ச்சியையும், தற்போதைய பொருளாதார நிலையும் அலசிப் பார்ப்போம்.

பழைய தங்க விலைகள் **Vs** தற்போதைய நிலை

தங்கம் ஒரு பாரம்பரிய முதலீட்டு வாய்ப்பு என்பதால், இந்தியாவில் அதன் விலை ஏற்றத்தாழ்வுகள் பொதுவாக சர்வதேச பொருளாதார சூழ்நிலையைப் பொருத்தே அமைகின்றன. கடந்த 10-20 வருடங்களில் தங்கத்தின் விலை மிகப்பெரிய மாற்றங்களை கண்டுள்ளது.

▲ 2000-2025 வரை, தங்கம் 15 மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ₹1,500-₹2,000 வரை உயர்ந்துள்ளது! இதன் பின்னணியில் பல காரணங்கள் உள்ளன.

| ஆண்டு | 1 கிராம் தங்கம் (**INR**) |
|---|---|
| 2000 | ₹450 |
| 2010 | ₹1,850 |
| 2015 | ₹2,700 |
| 2020 | ₹4,900 |
| 2023 | ₹5,500 |
| 2024 (**Dec**) | ₹6,450 |
| 2025 (**Jan**) | ₹6,800+ (உகந்த எதிர்பார்ப்பு) |



💰 நடுத்தர மக்களின் தங்க கனவு - எட்ட முடியாததா?

ஒரு காலத்தில் தங்கம் என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முக்கிய முதலீடாக இருந்தது. திருமணங்கள், பெயருக்கு வந்த விழாக்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் போது, தங்க நகைகள் வாங்குவது ஒரு பாரம்பரியமாக இருந்தது. ஆனால் இன்று, தங்கத்தின் விலை உயர்ந்ததால், நடுத்தர மக்களுக்கு இது ஒரு கனவாக மாறிவிட்டது. 2025ல் தங்கம் ஒரு கிராம் ₹6,500-ஐ தாண்டியுள்ளதால், ஒரு சவரன் வாங்கவே ₹52,000 - ₹55,000 செலவாகிறது. 10 சவரன் நகை வாங்கும் சிந்தனையே இப்போது பலருக்கும் தூரமானதாகிறது. இதனால், நடுத்தர மக்கள் தங்கம் வாங்குவதை நிறுத்துகிறார்களா? இல்லை, ஆனால் அவர்கள் புதிய வழிகளை தேடுகிறார்கள். தங்க நகைகள் வாங்க முடியாத நிலை வந்த பிறகு, பலர் **Sovereign Gold Bonds, Digital Gold, Gold ETFs** போன்ற முதலீட்டு வழிகளை தேர்வு செய்கிறார்கள். தங்கத்தை நேரடியாக வாங்குவதை விட, இதன் மதிப்பு உயரும்போது அதனை விற்று லாபம் பார்க்கலாம் என்ற கோணத்தில் பலர் செல்கின்றனர். தங்கம் வாங்குவது இன்று பணக்காரர்களுக்கான விஷயமாக மாறுகிறதா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால் நிபுணர்கள், மாறி வரும் முதலீட்டு வழிகள் மூலம், நடுத்தர மக்களும் தங்கத்தில் முதலீடு செய்யலாம் என்று கூறுகிறார்கள். இருப்பினும், ஒருகாலத்தில் அனைவருக்கும் எளிதாக கிடைத்த தங்கம், இன்று பலருக்குப் பெரும் சவாலாக மாறிவிட்டது.

2025 & அதன் பின்பு - தங்கத்தின் எதிர்காலம்

2025-ல் தங்கத்தின் விலை மேலும் உயரும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாகவே உள்ளது. உலக பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்பட வாய்ப்புள்ளதால், தங்கத்தின் தேவை கூடும். அதேசமயம், பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகள் தங்கக் கையிருப்புகளை அதிகரிக்கலாம் என்பதும் ஒரு முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறது. இந்தியாவில் திருமண சீசன் மற்றும் பண்டிகைகள் தொடர்ந்து வருவதால், வணிகரீதியாகவும், முதலீட்டாளர்களின் பார்வையிலும் தங்கத்தின் தேவை குறைய வாய்ப்பே இல்லை.

இந்நிலையில், முதலீட்டாளர்கள் தங்கத்தை நேரடியாக வாங்குவதற்குப் பதிலாக **Digital Gold, Sovereign Gold Bonds, Gold ETFs** போன்ற பாதுகாப்பான முதலீட்டு வழிகளை தேர்வு செய்யலாம். தங்கத்தின் விலை ஏற்றத்தாழ்வுகளைப் பயன்படுத்தி, நீண்ட கால முதலீட்டு திட்டங்களை உருவாக்குவது நன்மை பயக்கும். ஒரே நேரத்தில், முழுவதுமாக தங்கத்தில் முதலீடு செய்வதைத் தவிர்த்து, பல்வேறு முதலீட்டு வழிகளில் சமச்சீரான பணப் போக்கை பராமமுடிவுரை - தங்கத்தின் போக்கு தொடருமா?

தங்கத்தின் விலை கடந்த 20 ஆண்டுகளில் அதிகரித்தே வருகிறது. அதே நேரத்தில், முதலீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இதை எப்படி அணுகுகிறார்கள் என்பதே முக்கியம்!

💰 "தங்கம் வாங்கலாமா? இல்லையா?" - இதன் விடை உங்கள் முதலீட்டு நோக்கங்களைப் பொறுத்து இருக்கும்! "தங்கத்தின் வருங்கால போக்கு எப்படி இருக்கும்?" - சர்வதேச நிலவரங்களைப் பொறுத்தே அமையும்! மேலும், உக்ரைன் - ரஷ்யா போர் முடிவுக்கு வருவதால் தங்கம் விலை குறையும் என்று ஆய்வாளர்கள் தகவல் வெளியாகின., 2025ம் ஆண்டும் தங்கத்தின் வளர்ச்சிக்கு சாதகமான ஆண்டாக இருக்கும் என்பது உறுதியாகிறது!





## டொனால்ட் டிரம்ப்

# 2025 அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்பு!



அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றார்.தனது இரண்டாவது பதவி நாளில் "அமெரிக்காவின் பொற்காலம் இப்போதே தொடங்குகிறது" என்றும் "இன்றிலிருந்து, நமது நாடு மீண்டும் செழித்து உலகம் முழுவதும் மதிக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார். தனது புதிய பதவிக் காலத்தின் முதல் நாளில், ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் காலநிலை மாற்றம் முதல் குடியேற்றம் வரை பல்வேறு உத்தரவுகளில் கையெழுத்திட்டார் , மேலும் ஜனவரி 6, 2021 அன்று தலைநகரைத் தாக்கிய பலருக்கு பொது மன்னிப்புகளையும் வழங்கினார்.

2024 பிரச்சாரத்தின் போது அவர் அளித்த வாக்குறுதிகளின்படி அவரது சில உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டன. தனது புதிய நிர்வாகத்தில் எரிசக்தி முதல் குற்றவியல் மன்னிப்பு மற்றும் குடியேற்றம் வரையிலான விஷயங்களில் தனது முத்திரையைப் பதிக்க முயன்றபோது, ஏராளமான நிர்வாக உத்தரவுகளையும் வெளியிட்டார். டொனால்ட் டிரம்பின் பதவியேற்பு, பிறப்பு உரிமை குடியுரிமை குறித்த அறிவிப்புகள், நிர்வாக உத்தரவுகள் நேரடி புதுப்பிப்புகள்: பைடன் சகாப்தக் கொள்கைகளை மாற்றியமைக்கும் நிர்வாக உத்தரவுகளில் ஜனாதிபதி டிரம்ப் கையெழுத்திட்டார், இதில் 78 நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டன. முக்கிய நடவடிக்கைகளில் ஒழுங்குமுறை முடக்கம், அத்தியாவசியமற்ற கூட்டாட்சி பணியமர்த்தலை நிறுத்துதல் மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடியை நிவர்த்தி செய்தல் ஆகியவை அடங்கும். அவர் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்திலிருந்தும் விலகினார், பேச்சு சுதந்திரத்தை மீட்டெடுத்தார், மேலும் அரசியல் எதிரிகளுக்கு எதிராக அரசாங்க ஆயுதமயமாக்கலை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டார்.தனது புதிய பதவிக் காலத்தின் முதல் நாளில், ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் காலநிலை மாற்றம் முதல் குடியேற்றம் வரை பல்வேறு உத்தரவுகளில் கையெழுத்திட்டார் , மேலும் ஜனவரி 6, 2021 அன்று தலைநகரைத் தாக்கிய பலருக்கு பொது மன்னிப்புகளையும் வழங்கினார்.

**அமெரிக்காவின் எதிர்காலம் -டிரம்ப் ஆட்சியில் புதிய பாதை!**

டிரம்ப் மீண்டும் வெள்ளை மாளிகையில் அதிகாரப்பூர்வமாக இடம் பெறுவதால், அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையில்


பல மாற்றங்கள் ஏற்படும். அவர் முன்னரே வலியுறுத்திய சீனாவுடனான வர்த்தக போர் மீண்டும் தீவிரமாகலாம். ஏற்கனவே, 2017-2021 பதவிக் காலத்தில் சீனாவுக்கு எதிரான வரிவிதிப்புகளை அதிகரித்தவர், இப்போது அந்த நடவடிக்கைகளை மேலும் கடுமைப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சர்வதேச பொருளாதார சந்தையை பாதிக்கக்கூடியதாக இருக்கும். அதே நேரத்தில், ரஷ்யாவுடனான உறவுகளைப் பற்றி பெரும் எதிர்பார்ப்புகள் உள்ளன. உக்ரைன்-ரஷ்யா போர் முடிவடைய டிரம்ப் ஒரு மாற்றத்தை கொண்டு வருவாரா? என்பது உலக நாடுகளுக்கு முக்கியமான கேள்வியாக இருக்கிறது. பலரும், டிரம்ப் ரஷ்யா பக்கம் தன்னுடைய ஆதரவை திருப்புவார் என்றும், இது உக்ரைன் மீது அமெரிக்காவின் ஆதரவை குறைக்கும் என்றும் கருதுகிறார்கள். இஸ்ரேல் - பாலஸ்தீன் விவகாரத்தில், டிரம்ப் முன்னர் எடுத்த முடிவுகளை நினைவு கூர்ந்தால், அவர் மீண்டும் இஸ்ரேலுக்கு முழுமையாக ஆதரவு அளிக்கக்கூடும். இது மத்திய கிழக்கு நாடுகளுக்கு புதிய அரசியல் குழப்பத்தை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.





## டிரம்ப் பதவி ஏற்பு பிறகு இந்திய ஏற்றுமதி உற்பத்தியில் பாதிப்பா?

அமெரிக்கா மீண்டும் 'பொருட்களின் உற்பத்தி மையமாக' மாறும் என்றார். உலகிலேயே அதிக எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு அமெரிக்காவிடம் உள்ளது, அதை முழுமையாக பயன்படுத்துவோம் என்று கூறினார். டிரம்பின் இந்த அறிவிப்பு இனி வரும் காலங்களில் இந்தியாவையும் பாதிக்கும். எண்ணெய் நுகர்வில் உலக அளவில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவே உள்ளது. இந்தியா தனது எண்ணெய் தேவையில் 80 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. இதனையடுத்து, அவர் வெளியிட்ட சில செயல் முறைகள் இந்தியாவின் ஏற்றுமதியை பாதிக்கக்கூடியதாக கருதப்படுகின்றன.





**1. வர்த்தக ஒப்பந்தங்களில் மாற்றங்கள்:**

டிரம்ப், அமெரிக்காவின் வர்த்தக ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து, அமெரிக்க தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் மாற்றங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். இது, இந்தியாவின் அமெரிக்காவுக்கு செய்யும் ஏற்றுமதியில் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

**2. புலம்பெயர்வு கொள்கைகளில் கடுமையான மாற்றங்கள்:**


பி1-B விசா போன்ற தொழில்வாய்ப்பு விசாக்களில் கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதால், அமெரிக்காவில் பணிபுரியும் இந்திய தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை குறையலாம். இது, இந்தியாவின் சேவை ஏற்றுமதியில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

**3. சுற்றுச்சூழல் விதிகளில் மாற்றங்கள்:**

எரிபொருள் மற்றும் உற்பத்தி துறைகளில் சுற்றுச்சூழல் விதிகளை தளர்த்துவதால், அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கலாம். இது, இந்தியாவின் அதே துறைகளில் அமெரிக்காவுக்கு செய்யும் ஏற்றுமதியில் போட்டியை உருவாக்கக்கூடும். இந்த மாற்றங்கள், இந்தியாவின் ஏற்றுமதிக்கு சவால்களை ஏற்படுத்தலாம். ஆனால், இந்திய அரசு மற்றும் நிறுவனங்கள், புதிய சந்தைகள் மற்றும் வாய்ப்புகளை தேடுவதன் மூலம், இந்த சவால்களை சமாளிக்க முயற்சிக்கின்றன.






**அமெரிக்கா முதலில் - மீண்டும் துவக்கம்**

முதன்முறையாக 2017-2021 காலத்தில் "**America First**" கொள்கையை முன்னிறுத்திய டிரம்ப், மீண்டும் அதே கோஷத்துடன் தனது இரண்டாவது ஆட்சியை தொடங்கினார். இவர் பதவியேற்றவுடன், அமெரிக்க தொழிலாளர்களுக்கு ஆதரவான பொருளாதார மாற்றங்கள், குடிவரவு கட்டுப்பாடுகள், மற்றும் சீனாவுடனான வர்த்தக உறவுகளை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆகியவை மையமாக பேசப்பட்டன. அமெரிக்க தொழில் வளர்ச்சியை அதிகரிக்க, உள்நாட்டில் தொழிற்சாலைகளை அதிகரிக்க, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்க, மற்றும் நீண்டகால வரி தள்ளுபடி திட்டங்களை கொண்டு வருவதாக அறிவித்தார்.

**2 வது ஆட்சியின் புதிய அரசியல் கோணம்!**

டிரம்பின் இரண்டாவது ஆட்சி அமெரிக்கா மட்டுமல்லாமல், இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான உறவுகள் கடந்த ஆட்சியில் ஒத்துழைப்புடன் இருந்தாலும், இந்த முறை என்ன மாதிரியான தீர்மானங்கள் எடுக்கப்படுமோ என்பதில் அரசியல் மற்றும் பொருளாதார வட்டாரங்கள் கண்காணித்து வருகின்றன. இந்திய தொழில்நுட்பம், பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தக ஒப்பந்தங்கள் போன்றவை எந்த பாதையில் செல்வது என்பது வருங்கால நிகழ்வுகளால் தீர்மானிக்கப்படும். தொலைநோக்கில், டிரம்பின் "**America First**" கொள்கை இந்தியாவுக்கு சாதகமாக அமையுமா, இல்லையா என்பதைக் பார்க்கலாம்..


# ஜனவரி மாதம்
# மஹா கும்பமேளா
## 2025

**மஹா கும்பமேளா 2025 என்பது உலகின் மிகப்பெரிய ஆன்மிக விழாக்களில் ஒன்றாகும். இது உத்தரப் பிரதேசம் மாநிலம், பிரயாக்ராஜில் நடைபெற்ற இந்த விழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் புனித நிகழ்வு, பக்தர்கள், யாத்திரிகர்கள், துறவிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை மிகப்பெரும் அளவில் ஈர்க்கக்கூடியதாக இருக்கின்றன. இந்த விழா, இந்தியாவின் ஆன்மிக பாரம்பரியத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கான முக்கிய தருணமாக அமைந்துள்ளது. இந்த விழாவின் முக்கிய அம்சமாக ஷாஹி ஸ்னான் (அரசீய குளியல்) உள்ளது. இந்த குளியல், பக்தர்களுக்கு புனித நீரில் பாவங்களை நீக்கி, மோக்ஷம் அடைவதாக மக்கள் நம்பிக்கையாக உள்ளது. திரிவேணி சங்கமத்தில் (கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆறுகள் இணையும் இடம்) இந்த குளியல் நடைபெறுகிறது, இதனாலேயே இந்த இடத்திற்கு முக்கிய ஆன்மிக அருவி எனக் கருதப்படுகிறது. மஹா கும்பமேளாவுக்கு அரசு தரப்பில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த நிகழ்வை சிறப்பான முறையில் நடத்த பல உபகரணங்களை, பாதுகாப்பு, சுகாதார வசதிகள் மற்றும் போக்குவரத்து வாய்ப்புகளை முன்னிட்டு சிறந்த முறையில் நிகழ்த்துகிறது. இந்த விழா ஆன்மிக முக்கியத்துவம் மட்டுமின்றி, அதன் பாரம்பரிய, பண்பாட்டு மற்றும் பொருளாதார தாக்கங்களையும் உலக அளவில் பரப்புகிறது.**

### கும்பமேளா கொண்டாடப்படுவது ஏன்?

மஹா கும்பமேளா என்பது இந்தியாவின் மிகப்பெரிய முக்கியத்துவம் மற்றும் பின்புலம் மிகவும் ஆழமானவை. இந்த விழா கும்பம் என்ற கிண்ணம் அல்லது பானையை சின்னமாகக் கொண்டு, மூன்று முக்கிய நதிகள் - கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆகிய நதிகளின் சங்கமத்தை அடையாளப்படுத்துகிறது. கும்பமேளா கொண்டாடப்படுவது ஆன்மிக சார்ந்ததாக இருப்பதால் மக்கள் கொண்டாடுகின்றனர். இந்த விழா, பிரயாக்ராஜ் என்ற இடத்தில் நடைபெறும், இது நமது பாரம்பரிய கலாச்சாரத்தில் மிகவும் மதிக்கப்படும் இடமாக இருக்கின்றது. திரிவேணி சங்கமம் என அழைக்கப்படும் இடம், கங்கை மற்றும் யமுனையின் சந்திப்பிடத்தில் அமைந்துள்ளது, மேலும் இங்கு சரஸ்வதி ஆறு குறிக்கப்படும். இந்த இடத்தில் குளிப்பதன் மூலம், பக்தர்கள் தங்கள் நன்மைகளை பெறுவதோடு பாவங்களை நிவர்த்தி செய்து, தங்கள் ஆன்மிக முன்னேற்றத்தை அடைகின்றனர். கும்பமேளாவின் தொடர்ச்சியான முக்கியத்துவம் இந்தியாவில் அதன் பாரம்பரியத்தை மறக்க முடியாத முறையில் பாதுகாக்கும் என்று கூறப்படுகிறது. இந்த விழா துறவிகளுக்கு மற்றும் சாதுக்களுக்கு மிக முக்கியமாக கருதப்படுகிறது, ஏனெனில் அது அவர்களுக்கு தனிப்பட்ட ஆன்மிக அனுபவங்களை வழங்குகிறது. இது மட்டுமல்லாமல், இந்த நிகழ்வு உலகம் முழுவதும் பங்குபற்றிய பக்தர்களையும், யாத்திரிகர்களையும் ஈர்க்கும் வகையில் பாரம்பரிய ஒழுக்கங்கள் மற்றும் ஆன்மிக






பரிசோதனைகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இந்தியா முழுவதும் பல்வேறு சமய தரப்புகள், துறவிகள் மற்றும் மதவாதிகள் அனைவரும் இதில் பங்கேற்று, அவர்களின் ஆன்மிக தர்மங்களை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை பெறுகின்றனர்.

## கும்பமேலா: உயிரின் எதிரொலியும், பாதுகாப்பும்"

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயக்ராஜ் நகரில் நடந்து வரும் கும்பமேளாவில் நேற்று மிகவும் முக்கியமான நாள் ஆகும். மௌனி அமாவாசையான மட்டும் 10 கோடி பக்தர்கள் புனித நீராடுவார்கள் என்று ஏற்கெனவே எதிர்பார்த்த உத்தரபிரதேச அரசு அதற்கு விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தது. எங்கும் தடுப்புகளை அமைத்து கூட்டத்தை கட்டுப்படுத்தியிருந்தது. விழாவின் அதிகாலையில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆறுகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதுதான் மிகவும் நல்லது என்பதால் அதிகாலை நேரத்தில் கோடிக்கணக்கான பக்தர்கள் புனித நீராடுவதற்காக சங்கமம் பகுதியில் கூடியிருந்தனர். அவர்கள் புனித நீராடுவதற்கு இடம் பிடிக்கும் ஆர்வத்தில் காவல்துறையினர் அமைத்திருந்த தடுப்புகளை





உடைத்துக்கொண்டு உள்ளே சென்றனர். இதனால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு உள்ளே ஓட முயன்றதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. தடுப்புகளை உடைத்துக்கொண்டு ஓடியவர்கள் அருகில் உள்ள மைதானத்தில் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது ஏறிச்செல்ல ஆரம்பித்ததில் பலர் நசுங்கி உயிரிழக்க நேரிட்டது. அதிகமானோர் அதிகாலையில் எழுந்து புனித நீராடவேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு உறங்கிக்கொண்டிருந்தனர். அவர்களில் பலர் அப்படியே இடிபாடுகளில் சிக்கி இறந்து போனார்கள். இதனால் கும்பமேளா நடைபெறும் இடத்தில் அதிகாலை 2 மணிக்கு எங்கும் மரண ஓலமாக இருந்தது. ஆரம்பத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததாக செய்திகள் வெளியானது. ஆனால் எத்தனை பேர் இறந்தனர் என்ற விவரத்தை உத்தரபிரதேச காவல்துறையினர் தெரிவிக்காமல் இருந்தனர். அதே நேரத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்து இருந்தார். கூட்ட நெரிசல் குறித்து டிஜிபி வைபவ் கிருஷ்ணா கூறுகையில்,''திரிவேணி சங்கமம் பகுதி உள்பட பல இடங்களில் அமைக்கப்பட்டு இருந்த தடுப்புகளை பக்தர்கள் உடைத்துவிட்டனர். இதனால் புனித நீராடுவதற்காக பிரம்ம முகூர்த்தத்தை எதிர்பார்த்து உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது மற்றவர்கள் ஏறிச்சென்றனர்''என்றார். இடிபாடுகளில் சிக்கி 30 பேர் உயிரிழந்திருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களில் 25 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உத்தரப்பிரதேச காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். 60 பேர் காயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த முதல்வர் யோகி ஆதித்யநாத், ''கும்பமேளாவில் அதிகப்படியான கூட்டம் இருந்தது. ஒரே நேரத்தில் 8 முதல் 10 கோடி பக்தர்கள் குவிந்தனர். அதிகாலை 1 மணி முதல் 2 மணிக்குள் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. மக்கள் வதந்தியை நம்பவேண்டாம். கூட்ட நெரிசலில் சிக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 25 லட்சம் வழங்கப்படும். அதோடு சம்பவம் குறித்து 3 பேர் கொண்ட குழுவின் மூலம் நீதி விசாரணை நடத்தப்படும் என்றார். சம்பவத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து தெரிந்து கொள்ளப்படும். பக்தர்கள் திரிவேணி சங்கமத்திற்கு வராமல் கங்கையில் புனித நீராடி செல்லவேண்டும்''என்றார். இச்சம்பவத்தை தொடர்ந்து சிறிது நேரம் புனித நீராடல் நிறுத்தப்பட்டது.

## மஹா கும்பமேளா 2025: ஆன்மிக உற்சாகம் மற்றும் கூட்ட நெரிசல்

பிராக்யராஜில் நடைபெற்ற மஹா கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த விழாவில், பக்தர்கள் புனித நீராடுவதற்காக திரிவேணி சங்கமத்திற்கு வருகை தரிசனம் செய்து சென்றனர். இது ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இருப்பது போல், அதே நேரத்தில், கூட்ட நெரிசல் மற்றும் பாதுகாப்பு சிக்கல்கள் வெகு முக்கியமானவையாக மாறிவிட்டன. மேலும், அதிகாலை நேரத்தில், 10 கோடியுக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடுவதற்காக திரிவேணி சங்கமத்தில் குவிந்தனர். ஆனால், கூட்ட நெரிசல் காரணமாக பல உயிரிழப்புகள் நேர்ந்தாததால் விழாவுக்கு உத்தரபிரதேச அரசு பெரிய சவால்களை எதிர்கொண்டும், விழாவை பாதுகாப்பாக நடத்தியது. இந்த விழா ஆன்மிக உற்சாகத்தோடு, பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் கூட்ட நெரிசல் சமநிலையினை வலியுறுத்துகின்றது.


EPIC TOYOTA
HILUX
ADVENTUROUS
ACCOMPLISHED
Awesome
EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979




TIMES OF REPUBLIC . TAMIL MONTHLY . RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH